**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 04-11-2022**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-11-04 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-11-05 | 2022-11-06 | 2022-11-07 | 2022-11-08 | 2022-11-09 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 20.0 | 6.0 | 12.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 29.0 | 30.0 | 30.0 | 31.0 | 31.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 23.0 | 23.0 | 22.0 | 21.0 | 21.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 80 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 60 | 55 | 55 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6.0 | 6.0 | 6.0 | 6.0 | 6.0 |
| காற்றின் திசை (கோணம்) | 320 | 320 | 360 | 360 | 50 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 5 | 4 | 4 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

நவம்பர் 5,6,7 தேதிகளில் லேசான மழை முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 29-31 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 21-23 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 80-85 % ஆகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55-70 % ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 6 கி.மீ வரை வடமேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் 09.11.2022 முதல் 15.11.2022 வரை இயல்பான மழை மற்றும் வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது. வரும் நாட்களில் லேசான மழை முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் உரமிடுதல், மருந்து தெளித்தல் போன்ற பணிகளை மழை நாட்களில் தற்காலிகமாக தள்ளி வைக்க வேண்டும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் நாட்களில் லேசான மழை முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. எனவே பயிர்கள் பாதிப்படையாமல் இருக்க வடிகால்வசதி அமைக்க வேண்டும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் நெல் வயல்களில் வடிகால் வசதி மேற்கொள்ள வேண்டும். மேலும் உரமிடுதல், மருந்து தெளித்தல் போன்ற பணிகளை தற்காலிகமாக தள்ளி வைக்க வேண்டும் மற்றும் நீர் பாசனத்தை தள்ளி வைக்க வேண்டும். நெல் வயலில் அசோலா இடுவதன் மூலம் 25% ரசாயன உரம் பயன்படுத்துவதை குறைத்து மண்ணின் வளத்தை மேம்படுத்துவதுடன் மகசூலையும் பெருக்கலாம். நெற்பயிரில் இலை மடக்கு புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்த பைபிரினில் 1 மி.லி /லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தக்காளி | தக்காளியில் மகசூல் அதிகரிக்க டிரைக்கான்டனால் 1.25 பி பி எம் (625 மி.லி மருந்து 500 லிட்டர் நீரில் கலந்து ) நடவு செய்த 15 நாட்களுக்கு பின்பும், பூக்கும் பருவத்திலும் தெளிக்க வேண்டும் . |
| கத்திரிக்காய் | கத்தரிக்கு 1% (PPFM) நுண்ணுயிர் உரத்தை இலை வழி தெளிப்பதன் மூலம் பூக்கள் உதிர்வதை தடுத்து, காய்களின் தரம் உயர்வதுடன், எண்ணிக்கையையும் பெருக்கலாம். கத்தரியில் தண்டு மற்றும் காய்ப்புழு தாக்கத்தின் பயிர் மேலாண்மை முறை: பாதிக்கப்பட்ட அல்லது சேதப்பட்ட இலைக்குருத்து அல்லது நுனித்தண்டு மற்றும் பாதிக்கப்பட்ட காய்கள் போன்றவற்றை சேகரித்து அழிக்க வேண்டும். ஒரே இடத்தில் தொடர்ச்சியாக கத்தரி பயிரிடுவதை தவிர்க்க வேண்டும். |
| தென்னை | தென்னையில் காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த ஹெக்டருக்கு 5 ரைனோ லூர் இனக்கவர்ச்சிபொறிகளை அமைக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | பசுமாடுகள் மற்றும் கன்றுகளை மழையில் நனைய விடாமல் கொட்டகையில் கட்டி வைக்க வேண்டும். உலர்ந்த வைக்கோல், சோளத்தட்டை போன்றவற்றை மழையில் நனையாமல் பாதுகாக்க வேண்டும்.மழையில் நனைந்த உலர்தீவனங்களில் பூஞ்சை தொற்று இருந்தால் மாடுகளுக்கு உணவாக அளிப்பதை தவிர்க்க வேண்டும். பால் கறக்கும் முன்னும் பின்னும் மடியை கழுவவும். மடிவீக்கம், திரிந்த பால் , கெட்டுப்போன பால் மடியிலிருந்து வந்தால் தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும். |
| வெள்ளாடு | ஆடுகளுக்கு சளி, காய்ச்சல், தும்மல் இருந்தால் மேலோன்பிளஸ் என்ற மாத்திரை ஒன்று, சல்பாடிமிடின் என்ற மாத்திரை ஒன்று, இரண்டையும் அரைத்து 40 மில்லி தண்ணீரில் கரைத்து வாய் வழியே ஊற்றி விட வேண்டும்.ஆறு மாத குட்டி எனில் மேல் சொல்லப்பட்ட மாத்திரையில் அரை மாத்திரையும், மூன்று மாத குட்டி எனில் மேல் சொல்லப்பட்ட மாத்திரையில் கால் மாத்திரையும் மூன்று நாட்களுக்கு கால்நடை மருத்துவரின் ஆலோசனையின்படி தர வேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | தொடர் மழை சாரல் மற்றும் குளிர்ச்சி காரணமாக கோழி மற்றும் கோழிக்குஞ்சிகளில் சளி ஏற்பட்டால் சிகிச்சையாக என்ரோசின் பி.ஹெச் (ENROCIN BH ) என்ற மருந்தை ஒரு லிட்டர் குடிநீரில் 1 மி.லி வீதம் நான்கு நாட்களுக்கு தரவேண்டும். |